# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : ரேவதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து பூ கடையில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது கணவர் ஆவார். கடந்த 24.10.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு எனது கணவர் அவரது இருச்சக்கர வாகனமான TN-52-V-9702 Passion Pro வாகனத்தில் அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டு, தருமபுரி சாலையில் அரசு மருத்துவமனை அருகே இடது பக்கமாக சென்றுகொண்டிருந்தபோது, TVS Jupiter என்ற வாகனம் தருமபுரி நோக்கி வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக ரோட்டை கடக்கும்போது எனது கணவரின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள்.

2) இதனால் எனது கணவருக்கு தலையின் பின்புறம் காயம் ஏற்பட்டு, ஓமலூர் அரசு மருத்துவமனை மற்றும் சேலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எனது கணவரை மருத்துவமனையில் தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் எப்போது காவல் நிலையம் சென்றேன் என்றால் விபத்து நடந்த மறுநாள் காலை 8 – 9 மணியளவில் நான், எனது கணவரின் மாமா ஆகியோர் சென்றோம். புகார் நான் எழுதிக்கொண்டு சென்றேன் என்றால் சரிதான். போலிசார் என்னை புகார் கொடுக்கும்போதே விசாரித்தனர் என்றால்சரிதான். அதன் பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எனது கணவரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4) எனது கணவரின் உறவினர் மேச்சேரி காவல் நிலையத்தில் வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான். ஜமுனா என்பவர் வேலை செய்கிறார். அவர்தான் எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை பற்றி என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : மாரியப்பன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பவளத்தாம்பட்யில் குடியிருந்து விநாயகா என்ற பெயரில் ஆம்புலன்ஸ் ஓட்டி வருகிறேன். கடந்த 24.10.2022–ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் அரசு மருத்துவமனை முன்பு ஆம்புலன்ஸ் ஸ்டேண்டில் நின்று கொண்டிருந்தேன். அப்போது, அருள் என்பவர் TN–52–V–9702 Splender Passion Pro வாகனத்தில் தொப்பூர் – மேச்சேரி நோக்கி வடக்கிலிருந்து தெற்காக வந்துகொண்டிருந்தபோது, அரசு மருத்துவமனை அருகே மேச்சேரி பக்கமிருந்து தொப்பூர் நோக்கி வந்த TVS Jupiter TN–93–1217 என்ற இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

2) எதிரே வந்த வாகனம் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென அரசு மருத்துவமனைக்குள் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆகும். இதனால் அருள் என்பவருக்கு தலை, மூக்கு, காது ஆகிய பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. நான் அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தேன்.

3) ஆஜர் எதிரிதான் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) போலிசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் சம்பவம் நடந்த அடுத்தநாள் மாலை 5 – 6 மணிக்குவிபத்து நடந்த இடத்தில் போலிசார் என்னை விசாரித்தனர். நான் போலிசார் விசாரணையிலும் தற்போது சொன்னது போல் தான் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருந்து மேச்சேரி காவல் நிலையம் எவ்வளவு தூரம் என்றால் அருகில் தான் உள்ளது.

4) சம்பவம் இடத்திற்கு போலிசார் உடனே வந்துவிட்டனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் சம்பவம் நடந்த உடனே விபத்தில் அடிப்பட்டவரை மருத்துவமனை அழைத்து சென்றுவிட்டேன். எனது ஸ்டேண்ட்க்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் ஆகும். யார் யார் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றால் ராகவன், ராஜ்குமார் ஆகியோர் மற்றும் பலர் இருந்தனர்.

5) Spelender வண்டியின் எந்த பாகம் ஸ்கூட்டி வண்டியின் எந்த பாகத்தின் மீது மோதியது என்றால் Splender ன் முன்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. ஸ்கூட்டிக்கும் முன்புறம் தான் சேதம் ஏற்பட்டது. மிதமான வேகத்தில் வரும் போது முன்பாக வேறு எந்த வாகனம் வந்தாலும் நிறுத்த முடியும் என்றால் ஆமாம். அவ்வாறு வேகமாக வந்தால் உடனடியாக நிறுத்த முடியாது என்றால் சரிதான்.

6) இறந்தவர் அதிவேகமாக வந்து மோதி விட்டார் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதால் தான் என்னால் சரியாக சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட வாகனத்தில் Splender வாகனத்திற்கு எந்த அடியும் ஏற்படவில்லை என்று சேதம் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் இரண்டு வண்டிக்கும் முன்பக்கம் சேதம் உள்ளது.

7) Splender வாகனத்தில் வந்தவர் ெஹல்மெட் அணிந்திருந்தாரா என்றால் இல்லை. அவ்வாறு தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிபட

வாய்ப்பில்லை என்றால் ஆமாம். ஆஜர் எதிரியின் வீடு அரசு மருத்துவமனைக்குள் தான் உள்ளதால் அவர் அந்த வழியாகத்தான் செல்ல முடியும் என்பதால் விபத்தில் இறந்தவர் அதிவேகமாக வந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் உறவினர்கள் இருவர் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்வது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல், இறந்தவரின் உறவினர்கள் காவல் நிலையத்தில் வேலை செய்வதால் நான் காவல் நிலையம் அருகில் ஸ்டேண்டில் ஆம்புலன்ஸ் நிறுத்துவதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**